திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் மப்பேடு ஊராட்சியில் உள்ள நியாய விலை கடையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் பரிசுத்தொகுப்பாக தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கத் தொகை ஆகியவற்றை திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் வழங்கினார் உடன் ஒன்றிய கழக செயலாளர் மோ.ரமேஷ், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேஷன் உள்பட கூட்டுறவு துறை அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் ஒன்றியம் தடபெரும்பாக்கம் ஊராட்சி டிவி புரம் நியாய விலை கடையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் பரிசுத்தொகுப்பாக தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கத் தொகை ஆகியவற்றை மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா, மாநில வர்த்தக அணி துனை செயலாளர் பாஸ்கர் சுந்தரம், முன்னாள் மாவட்ட பிரதிநிதி ப.து. தமிழரசு, கூட்டுறவு செயலாளர் பாஸ்கர் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில்

சேலத்தில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம்!

பொன்.குமார் முன்னிலையில் நடைபெற்றது!

சேலம், ஜன. 9 –

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.01.2026 அன்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் முன்னிலை யில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலகட்டத்தில் பொறுப்பேற்று தனது திறமையால் சிறப்பான ஆட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக மகளிர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஆகிய அனைத்து தரப்பு மக்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக சென்றடையும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக உடல் உழைப்பு தொழிலாளர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் என அனைத்தையும் உயர்த்தி வழங்கி அவர்களை கை தூக்கி விடும் அரசாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் அனைத்து திட்டங்களையும் அவர்களுக்கு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 3024 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை, 109 பயனாளிகளுக்கு ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை, 6 பயனாளிகளுக்கு ரூ.4500 மதிப்பீட்டில் கண்கண்ணாடி, 1 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் ஓய்வூதியம், 8 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.2.80 இலட்சம், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.2.05 இலட்சம், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எல்டைப்) 16 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொள்ள உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எம் டைப்) 20 பயனாளிகளுக்கு ரூ.29.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு வீடுகளும் என மொத்தம் 3185 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்கள் பேசியதாவது : –

முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 10,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வீடுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கட்டுமான தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3000 கோடிக்கு மேல் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் பல புதிய திட்டப்பணிகளையும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக திருமண நிதியுதவி ரூ.5,000 இருந்து ரூ.20,000 ஆகவும், மகப்பேறு உதவித்தொகை ரூ.6,000 இருந்து ரூ.18,000 வரையிலும், விபத்து மரண உதவித்தொகையாக ரூ.8,00,000 உயர்த்தி வழங்கியதுடன் கல்வி உதவித்தொகை 6ம் வகுப்பு முதல் வழங்கி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கட்டாயம் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சொந்தமாக மனை வைத்திருந்தால் வீடு கட்டிக்கொள்ள ரூ.4,00,000 உதவித்தொகையும், சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோய், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலார்களுக்கு ரூ.12,000, ஓய்வு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட குடும்ப அட்டைதார்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தியுள்ளார்கள் மேலும், தேவைப்படும் அனைத்து உதவி களையும் செய்திடவும் முதலமைச்சர் அவர்கள் தயாராக உள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தொழிலாளர் உதவி ஆணையர்கள் சண்பகராமன் (சமரசம்), திருநந்தன் (அமலாக்கம்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.கே.மோகன் ஏற்பாடு! கு.பாபு தலைமை!

100(அ) வட்டத்தில் பொங்கல் பரிசு!

ச.பரமசிவம் - வசந்தி பரமசிவம் பங்கேற்பு!

சென்னை, ஜன. 09-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதி 100(அ) வட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வழிகாட்டுதலின்படி அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஏற்பாட்டில் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன் தைத் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு வட்டம் முழுவதும் உள்ள பொதுமக்களுக்கு பொங்கல் பரிசு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், 100வது வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், 100(அ) வட்ட செயலாளர் கு.பாபு தலைமையில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மற்றும் அரசு அறிவித்த பொங்கல் பரிசினை நியாயவிலை கடையில் பொது மக்களுக்கு பொங்கல் பரிசு விநியோகம் செய்யப்பட்டது. மற்றும் நிர்வாகிகளும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கும்மிடிப்பூண்டி, ஜன.9-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் KEMIN INDUSTRIES சார்பில்: புதிய கலையரங்கம் கட்டப்பட்ட கட்டித்தை திறந்து வைத்து மேலும் கவரைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் ஏ.என். குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி, மாதர்பாக்கம் மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் மாதர்பாக்கம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் 851 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினாரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தரான் வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் எஸ். ரமேஷ், இரா.அறிவழகன் கே.ஜி.நமச்சிவாயம் இதிருமலை. கே.எஸ்.சதீஷ்குமார், காசு ஜெகதீசன் கசு தமிழ்உதயன் க.சம்பத் மோகன்பிரசாத் மு வேதாசலம் எஸ்.ராமஜெயம், மு.கேசவன் கே.வி.நாகராஜ் கிருபாகரன், க. முனிவேல் ஏ.என்.குப்பம் மோகன், கே.என்.பழனி சுரேஷ் ச.கதிரவன் எம் அருள் பா அனந்தராஜ் பிரபாகன், அமுல்ராஜ், கதிரவன், பானு, வழக்கறிஞர் பாஸ்கர், மாவட்ட கல்வி அலுவலர் (பொறுப்பு) எம்.அய்யப்பன் தலைமை ஆசிரியர் முத்துக்குமரன் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் அம்பேத்கர் நடராஜன், காசிம்சந்த பண்டாரி, டி குமாரி எம். மாரிமுத்து, உதவி தலைமை ஆசிரியர் என். ஆறுமுகம் மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வட்டச் செயலாளர் அ.கதிரேசன் தலைமையில்

137 'ஆ' வட்டத்தில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி கூட்டம்!

சென்னை, ஜன.9-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137வது ஆ வட்ட கழகத்தில் 08.01.2026 அன்று பாகம் 166ல் மாலை நாகாத்தம்மன் கோவில் தெருவில் டி.செல்லா தலைமையில் பாகம் 161ல் ஈ வி கே சம்பத் தெருவில் 07.00 மணிக்கு ஆர்.சேது தலைமையில் பாகம் எண் 156ல் இரவு 07:30 மணிக்கு மொரார்ஜி தேசாய் தெருவில் கே.தணிகாசலம் தலைமையில் பாகம் எண் 154ல் இரவு 8:00 மணிக்கு அவ்வையார் தெருவில் பட்டம்மாள் தலைமையில் பாகம் எண் 146ல் இரவு 08:30 மணிக்கு நேரு தெருவில் முத்துக்குமார் தலைமையில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி வட்டக் கழகச் செயலாளர் அ. கதிரேசன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இக்கூட்டத்தில் விருகம்பாக்கம் தொகுதி பொறுப்பாளரும் மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளருமான வி உமா காந்த் பங்கேற்று சிறப்புரையாற்றி னார் இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ எம் வி பிரபாகராஜா, 137வது வட்ட மாமன்ற உறுப்பினரும் கணக்கு மற்றும் தணிக்கை குழு தலைவருமான தலைமை செயற்குழு உறுப்பினர் அண்ணன் க.தனசேகரன், மாநில வர்த்தக அணி செயலாளர் அண்ணன் காசி முத்துமாணிக்கம் ,பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினருமான கே.கண்ணன் மாவட்ட கழக துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன் மாவட்ட அமைப்பாளர்கள் சசிகுமார் நிஷா சையத் பகுதி துணைச் செயலாளர் எஸ்.ரவி ஆகியோர் கலந்து கொண்டனர் மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மகளிர் அணியினர் கழக முன்னோடிகள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்டச் செயலாளர் க.பாபு தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

பெரம்பூர் 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் திராவிட சமத்துவ பொங்கல் விழா!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. பரிசு வழங்கல்! கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜன. 09 -

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் திராவிட சமத்துவ பொங்கல் விழா (11.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, எம்.கே.பி. நகர், 18 வது மேற்கு குறுக்கு தெருவில் நடைபெறுகிறது.

36 (அ) வட்டச் செயலாளர் க.பாபு தலைமை வகிக்கிறார்.

பெரம்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, எஸ். ஆர்.கமலக்கண்ணன், எஸ். சாக்ரடீஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ச.சச்சிதானந்தம், புல்லட் செபாஸ்டின், நா.பூபாலன், பி.பிரகாஷ், எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், பிரேசிடென்சி சி.சதீஷ், இல. பொன்னரசன், டி.வளன்ராஜ், நா.நடராஜன், கே.சேதுராமன், க. அரிமூர்த்தி, கே.எம்.குழந்தைசாமி, ஏ.என்.சரவணன், எச். மோகனா எம்.மதிவாணன், எம்.எஸ்.முருகன், கே.ஜி.சீனிவாசன், துரை பாஸ்கர், வி.முரளி, டி.தினகரன், ல. கார்த்திக், எச்.அருண் பாண்டியன், சு.சக்திவேல், எஸ். சுரேஷ், டி .அல்தாப் சேட்டு, ஜி.திலகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கன்னிகை ஜி.ஸ்டாலின், இரா. நரேந்திரன், இரா.கருணாநிதி, வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், ப.மதிவாணன், க.அமுல், டி. கமலக்கண்ணன், த.ஆறுமுகம், எஸ். அருள், ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், கே.வி. ராஜன், என்.பார்த்திபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.இ.செந்தமிழ் அரசு, சி. எஸ்.ரவி , ந.சர்வ ஜெயாதாஸ் எம்.சி, சி.ஆனந்தி எம்.சி, க.சர்மிளா காந்தி எம்.சி, மு.சாகுல் அமீது, வி.வேதா, இரா.ஜோதிமணி, வி.எஸ். பிரபு மற்றும் 36 (அ) பாக முகவர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நா.மோ.முரளி ஏற்பாட்டில் — திராவிட பொங்கல் விழா!

132வது வட்டத்தில் கழகத்தினருக்குப் புத்தாடைகள்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன. 9-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி 132 வது வட்ட தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் நாளை முன்னிட்டு கழகத் தோழர்களுக்கு புத்தாடைகள் வழங்கும் விழா இன்று (9/1/2026 - வெள்ளிகிழமை) மாலை 6 மணியளவில் ஜெ.கருணாநிதி தலைமையில்,

எஸ்.மோகன், கோடம்பாக்கம் மு.சத்தியா ந.மோ முரளி ஆகியோர் முன்னிலையில் கழகத் தோழர்களுக்கு புத்தாடைகள் வழங்குபவர் மயிலை த. வேலு வழங்குகிறார்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன், கே.ஏழுமலை, ரத்னா லோகேஸ்வரன், கார்த்திகா, பாஸ்கர்,

மற்றும் வட்டக் கழக பகுதி கழக மாவட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடு ந.மோ முரளி செய்திருந்தார்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து,வார்டு எண்.63லில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டபட்ட புதிய நியாய விலை கடை கட்டிடத்தை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., திறந்து வைத்தார்.உடன் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மேற்கு பகுதி செயலாளர்,5 ஆவது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன்,பகுதி துணை செயலாளர் கி.வேல்மணி, மாமன்ற உறுப்பினர்கள் பி.ஜோதிகுமார், ரமணிஆதிமுலம், டி.ஆர்.கோபி, கொடி தாமோதரன், செ.சுரேஷ், சினிவாசகுமார், ஜா.ரவிகுமார், இரா.செல்வகுமார், இரா.விஜயகுமார், முத்துமாறன், தங்கராஜ், ஜி.கலா, சந்தோஷ்குமார் இலக்கிய லோகநாதன் மற்றும் வட்ட செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் புதிய நியாய விலைக்கடைகள் திறப்பு!

பொங்கல் பரிசுத் தொகுப்பு - ரொக்கம் ரூ.3000!

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன. 9-

கழகத் தலைவர்-தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் இளந்தலைவர்- தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 84.09 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு நியாயவிலைக் கடைகள், நவீன டென்னிஸ் ஆடுகளம் ஆகிய திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் பொங்கல் பரிசுத் தொகை ரூ.3,000/- ஆகியவற்றை வழங்கினார்.

எழும்பூர் தொகுதி, புரசைவாக்கம் பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் வார்டு எண்.99, புரசைவாக்கம், லாடர்ஸ் கேட்டில் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 29.82 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நியாயவிலைக் கடை கட்டிடம் கட்டப்பட்டு, அதில் தாக்கர் தெரு மற்றும் வெள்ளார் தெருவில் தனியார் கட்டிடத்தில் இயங்கிவந்த கங்காதீஸ்வரர் கோவில் 1 மற்றும் கங்காதீஸ்வரர் கோவில் 2 ஆகிய இரண்டு நியாயவிலைக் கடைகள் இடம் மாற்றம் செய்யப்பட்டன.

புரசைவாக்கம், சதாசிவம் தெருவில் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 24.41 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நியாயவிலைக் கட்டிடம் கட்டப்பட்டு, அதில் பார்த்தசாரதி தெருவில் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்த வள்ளுவன்-2 நியாயவிலைக் கடை இடம் மாற்றம் செய்யப்பட்டது.

புரசைவாக்கம், லெட்டாங்ஸ் சாலையில் புனரமைக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடத்தில், சுந்தரம் தெருவில் தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்த பொன்னப்பா தெரு-2 நியாய விலைக் கடை இடம் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நான்கு நியாய விலைக் கடைகளையும் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் திறந்து வைத்து, அக்கடைகளைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் பொங்கல் பரிசுத் தொகை ரூ.3,000/- வழங்கினார்.

மேலும், புரசைவாக்கம் பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் புரசைவாக்கம், லாடர்ஸ் கேட்டில் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 29.86 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நவீன டென்னிஸ் ஆடுகளத்தையும் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் விஜயகுமார், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ். குமார், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் மா. காந்தி, கமலக்கண்ணன்; அவைத் தலைவர் டி.விஸ்வநாதன், 77 'அ' வட்டத் துணைச் செயலாளர் ஆர். ஆரோக்கியம், எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெயலெட்சுமி, 99-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் தெ.திவாகரன், 99 'அ' வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.குணா, 58-வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ரோஹித்குமார், முன்னாள் அவைத் தலைவர் கி.புஷ்பராஜ், தேவநிதி, பிரம்மதேவன், சிவக்குமார், மணிகண்டன், பி.டி.சி.பாலு, எம். கணேசன், கோட்டி, மீனா, லதா, வள்ளி, மகேஸ்வரி, மகி, இருதயமேரி, பப்பி, பாண்டியன், இருதயராஜ், சத்தியநாதன், சேகர், கபில், யாகப், சிம்பு, கமலநாதன், கார்த்திக் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்துகொண்டனர்.

எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் 4 நியாயவிலைக் கடைகள் – டென்னிஸ் ஆடுகளம் ஆகியவற்றை திறந்து வைத்து தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூ.3000/– குடும்ப அட்டைதாரருக்கு வழங்கினார்.